காங்கேயம் சாலை குள்ளாய்ப் பாளையத்தில் கட்டப்பட்டு வரும்

# பாலத்திலிருந்து விழுந்து உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் நிதி உதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, மே 5 -

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், தாராபுரம்காங்கேயம் சாலை, குள்ளா ய்ப் பாளையம் பகுதியில் புதிதாகக் கட்டப்பட்டு வரும் பாலத்திலிருந்து

இருசக்கர வாகனம் தவறி விழுந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், சூரியநல்லூர் கிராமம், சேர்வக்காரம்பாளையத்தைச் சேர்ந்த திரு. நாகராஜ் (வயது 44) த/பெ.குழுந்தான் என்பவர் தனது மனைவி திருமதி. ஆனந்தி (வயது 38) மற்றும் மகள் செல்வி. தீட்சையா (வயது 12) ஆகியோருடன் (3.5.2025) அன்று இரவு தனது இருசக்கர வாகனத்தை ஸ்டாண்டிலிருந்து எடுத்துக்கொண்டு வீட்டிற்குச் செல்லும் வழியில்

தாராபுரம் – காங்கேயம் சாலை, குள்ளாய்பாளையம் பகுதியில் புதிதாக கட்டப்பட்டு வரும் பாலத்திலிருந்து இருசக்கர வாகனம் தவறி விழுந்த விபத்தில் நாகராஜ் மற்றும் திருமதி.ஆனந்தி ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரகர மான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் பலத்த காயமடைந்து கோயம்புத்தூர் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் செல்வி.தீஷிதா என்பவருக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழுந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் செல்வி.தீக்ஷிதாவிற்கு ஒரு இலட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டு ள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவிப்பில் தெரிவித்துள்ளார்.

கடலூர் மாவட்டம்

# கடலூர் மாநகராட்சியில் ரூ.8.63 கோடி மதிப்பில் மீன் அருங்காட்சியகம்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் திட்டப்பணியை தொடங்கி வைத்தார்!

கடலூர், மே 5 -

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தலைமையில் கடலூர் நாடாளுமன்ற உறுப்பினர் மரு.எம்.கே.விஷ்ணுபிரசாத், கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், கடலூர் மாநகராட்சி மேயர் திருமதி சுந்தரிராஜா ஆகியோர் முன்னிலையில் மாநகராட்சியில் ரூ.8.63 கோடி மதிப்பீட்டில் மீன் அருங்காட்சியகம் மற்றும் தேவனாம்பட்டினம் வெள்ளி கடற்கரையில் நீலக்கொடி திட்டத்தின் கீழ் மேம்பாட்டுப் பணிகளுக்கும் நேற்று (04.05.2025) அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்ததாவது,

முதலமைச்சர் அவர்கள் பொதுமக்கள் மகிழ்ச்சியுடன், உள்ளூர் பகுதியிலேயே குடும்பங்களுடன் பொழுதுபோக்கு அம்சங்களை கண்டு களித்திடும் வகையிலும் அனைத்து பகுதிகளிலும் உள்ள சுற்றுலா தளங்களை மேம்படுத்திட பல்வேறுகட்ட சிறப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். அந்த வகையில் கடலூர் மாநகராட்சியில் உள்ள சுப்பராயலு பூங்காவில் பல்வேறு வகையான மீன் வகைகளை பார்வையிடவும், மாணவர்களிடையே அறிவியல் ஆர்வத்தை ஊக்குவிப்பதற்காகவும் மீன் அருங்காட்சியகம் மற்றும் தேவனாம்பட்டினம் கடற்கரையில் பொழுதுபோக்கு சிறப்பம்சங்களுடன் கூடிய மேம்பாட்டுப் பணிகளும் மேற்கொள்ளப்பட உள்ளன. நீலக்கொடித் திட்டம் சென்னையிலிருந்து நாகப்பட்டினம் வரை அறிவிக்கப்பட்டதில் சாமியார் பேட்டை கடற்கரையும் இடம்பெற்றுள்ளது.

மஞ்சக்குப்பம் பகுதியில் சுப்புராயலு பூங்காவிற்கு வருகைபுரியும் பொதுமக்களுக்கு எண்ணிக்கையினை அதிகரித்திடும் வகையிலும், சேதமடைந்த விளையாட்டு உபகரணங்களை சீரமைத்து மீண்டும் பயன்பாட்டிற்கு கொண்டுவரவும் வகையிலும் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடலூர் மாநகராட்சியின் எல்லைக்குள் தமிழகத்தின் புகழ்பெற்ற கடற்கரை பகுதிகளில் ஒன்றான தேவனாம்பட்டினம் வெள்ளிக் கடற்கரை அமைந்துள்ளது. இக்கடற்கரை ஆசியாவின் நீளமான கடற்கரைகளில் ஒன்றாகவும், கிழக்குக் கடற்கரை பகுதியில் அமைந்துள்ள இரண்டாவது நீளமான கடற்கரையாகும். புகழ்பெற்ற கடல் மீன்களின் விற்பனை பகுதியாகவும், சிறுதொழில்கள் அமையப்பெற்ற பகுதியாகவும் உள்ளது. இக்கிழக்கு கடற்கரை பகுதியிலேயே புகழ்பெற்ற சுற்றுலா தலங்கள் நிறைய அமையப் பெற்றதால், சுற்றுலா வரும் பயணிகள் கடலூரின் வெள்ளிக் கடற்கரையினை பார்த்து ரசித்து செல்கின்றனர்.

அந்த வகையில் வெளி மாநிலத்தை சேர்ந்த சுற்றுலாப் பயணிகளின் வருகையினை அதிகரிக்கும் வகையில் வெள்ளிக் கடற்கரை பகுதியை மூலதன மானிய திட்ட நிதியின் கீழ் ரூ.4.98 கோடி மதிப்பீட்டில் அதிநவீன பொழுதுபோக்கு மின் சாதனங்கள் அமைத்தல், அழகிய வேலைப்பாடுடன் கூடிய பூங்கா, செயற்கை நீரூற்றுகள், ஓய்வெடுக்கும் பகுதிகள், பெயர் பலகைகள், சாலை தடுப்புகள், அழகிய நடைபாதை, சிற்றுண்டி விற்பனை கடைகள், சில்வர் குப்பைத் தொட்டிகள் மற்றும் வாகன நிறுத்துமிடம் போன்ற பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், இக்கடற்கரை பகுதியை சிறந்த சுற்றுலா தலமாக மேம்படுத்தும் வகையில் பொதுமக்கள் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்றவாறு அனைத்து அம்சங்களுடன் மேம்படுத்திடவும் நீலக்கொடி திட்டத்தின் கீழ் ரூ.4 கோடி மதிப்பீட்டில் உட்காரும் குடை, உட்காரும் மூங்கில் இடம், வாட்ச் டவர், மணல் சுத்தம் செய்யும் இயந்திரம், ஜாகிங் டிராக், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம், மூங்கில் வீட்டு உறை, கம்பங்களுடன் கூடிய LED தெரு விளக்கு, சி.சி.டி.வி. கேமராக்கள், கடற்கரை வரைபடம், தகவல் காட்சிப் பலகை, ஆஃப் கிரிட் சோலார் பவர் பிளாண்ட், ஆண்கள் மற்றும் பெண்கள் கழிப்பறை அறைகள் மற்றும் மாற்றும் அறைகள், முதலுதவி அறை உள்ளிட்ட சிறப்பம்சங்களுடன் கடற்கரையினை மேம்படுத்தும் பணிகளுக்கு இன்றைய தினம் அடிக்கல் நாட்டப்பட்டது.

இப்பணிகள் மூலம் உள்ளூர் சுற்றுலா தளங்கள் மேம்படுவதுடன், பொது மக்கள வருகை அதிகரிப்பதனால் சுற்றுலாத் துறைக்கு அதிகளவு வருமானம் கிடைப்பதால் தலா வருமானமும் உயரும். உள்ளூர் சிறு தொழில் புரிவோருக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும். மேலும், இப்பணிகளை விரைவில் முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி துணை மேயர் பா.தாமரைச்செல்வன், மாநகராட்சி ஆணையாளர் மரு.எஸ்.அனு செயற்பொறியாளர் கோவிந்தராஜ், மாமன்ற உறுப்பினர்கள் உட்பட அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

புதுக்கோட்டை மாவட்டம்

# அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் திட்டப் பணிகள்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் துவக்கி வைத்தார்!

துக்கோட்டை, மே 5 -

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், பல்வேறு புதிய வளர்ச்சி திட்டப் பணிகளை, பிற்ப டுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் (01.05.2025) அன்று அடிக்கல்நாட்டி துவக்கி வைத்தார். பின்னர் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்ததாவது;

முதலமைச்சர் அவர்கள் கிராமப்புறங்களில் வாழும் பொதுமக்களின் பொருளாதாரத்தினை மேம்படுத்திடும் வகையில் பல்வேறு வளர்ச்சி திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் கிராமப்புறங்களுக்கு குடிநீர் வசதி, மின் வசதி, சாலை வசதி உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், பல்வேறு புதிய வளர்ச்சி திட்டப் பணிகள் அடிக்கல்நாட்டி துவக்கி வைக்கப்பட்டது.

அதன்படி, அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியத்தில், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தி ன் கீழ், கொடிவயல் ஊராட்சியில் ரூ.43.13 லட்சம் மதிப்பீட்டிலும், விஜயபுரம் ஊராட்சியில் ரூ.41.20 லட்சம் மதிப்பீட்டிலும், பரவாக்கோட்டை ஊராட்சியில் ரூ.40 லட்சம் மதிப்பீட்டிலும் புதிதாகக் கட்டப்படவுள்ள பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை அடிக்கல்நாட்டி துவக்கி வைக்கப்பட்டது. இப்பணிகள் அனைத்தையும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் தரமாகவும், விரைவாகவும் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர அறிவுறுத்தப்பட்டது.

எனவே தமிழக அரசின் மூலம் பொதுமக்களின் நலம் காக்கும் வகையில் செயல்படுத்தப்படும் இது போன்ற நலத்திட்டங்களை அனைவரும் உரிய முறையில் பெற்று பயனடைய வேண்டும் எனவும் பிற்ப டுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் ச.சிவக்குமார், அறந்தாங்கி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சி.நளினி, ஆர்.எஸ்.குமாரவேலன், அறந்தாங்கி வட்டாட்சியர் க.கருப்பையா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# வேலூர் மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



வேலூர் மாவட்ட திமுக அவசர செயற்குழு கூட்டம் இன்று (05.05.2025) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி தலைமையில் வேலூர் மாவட்ட திமுக அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ள பொருள்கள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது. அது சமயம் மாவட்ட நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள் ஆகியோர்கள் தவறாமல் கலந்துக் கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பொருள்:-

1) இந்திய ஒன்றியத்திற்கே முன்மாதிரியான முதல்வராக திகழும் நமது கழக தலைவருக்கு பாராட்டு தெரிவித்தல்

2) கழக அரசின் 4 ஆண்டுகால சாதனைகளை மாவட்டம் முழுவதும் மக்கள் முன் எடுத்து செல்ல சாதனை விளக்க கூட்டங்கள் நடத்துவது

3) ஜுன் 1-அன்று மதுரையில் நடைபெற உள்ள கழக பொதுக்குழு கூட்டத்தில் மாவட்டத்திற்கு உட்பட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்துக்கொள்வது

4) மற்றும் கழக ஆக்கப் பணிகள்

**ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ.**
செயலாளர்
வேலூர் மாவட்ட தி,மு,க,.



# தி.மு.க. இளைஞர் அணி

இளைஞர் அணிச் செயலாளர் **உதயநிதி ஸ்டாலின்** அறிவிப்பு

**ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!**

விருதுநகர் வடக்கு மற்றும் சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 06.05.2025 செவ்வாய்க்கிழமை | காலை 9.00 மணி | சிவகங்கை | ராஜேஸ்வரி மஹால், சிவகங்கை சாலை, திருப்பத்தூர். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 02-05-2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

# சேலம் கிழக்கு மாவட்ட கழக செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் அறிக்கை!



சேலம், மே 5 -

சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க செயற்குழுக் கூட்டம் 06.05.2025 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி அளவில் வாழப்பாடியில் உள்ள சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க அலுவலகம் தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில் மாவட்ட கழக அவைத்தலைவர் மு.ரா.கருணாநிதி தலைமையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்திற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள், மற்றும் கழகத்தின் துணை அமைப்புகளான அனைத்து சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துக் கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

1. சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற மாவட்ட கழக செயலாளர்கள் கூட்டத்தில் 2026 சட்டமன்ற தேர்தல் குறித்து கழகத் தலைவரின் அவர்களின் ஆலோசனைகள் குறித்து

2. "நாடு போற்றும் நான்காண்டு, தொடரட்டும் பல்லாண்டு!", சாதனை விளக்கப் பொதுக்கூட்டங்கள்

3. பவள விழாக் கண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக்குழு -

கழகத்தலைவரின் அறிவுறுத்தலின்பேரில் கூடல்மாநகரில் ஜூன் 1ஆம் நாள் கூடுகிறது!

4. கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# திருப்பூர் வடக்கு மாவட்ட தி.மு.கழக செயற்குழு கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் ந.தினேஷ்குமார் அறிவிப்பு!



திருப்பூர், மே 5 -

திருப்பூர் வடக்கு மாவட்ட தி.மு.கழக செயற்குழு கூட்டம் 05-05-2025 திங்கட்கிழமை இன்று மாலை 4.00 மணியளவில் திருப்பூர், 15 வேலம்பாளையம், பார்ச்சூன் ஹோட்டல் அருகில் அமைந்துள்ள மாவட்ட, மாநகர கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் க.நடராசன் தலைமையில் நடைபெற உள்ளது.

அதுசமயம் மாநில, மாவட்ட, நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட, மாநகர அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் :

1. கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்து.

2. நாடு போற்றும் நான்காண்டு! தொடரட்டும் இது பல்லாண்டு

கழக ஆட்சியின் நான்காண்டு சாதனைகள் குறித்து தொகுதி, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி கழக சார்பாக சாதனை விளக்கப் பொதுக் கூட்டங்கள், தெருமுனை கூட்டங்கள் நடத்துவது குறித்து.

3. ஜூன் 1ம் தேதி மதுரையில் நடைபெறும் கழகப் பொதுக்குழு கூட்டம் குறித்து.

4.கழக ஆக்கப்பணிகள் குறித்து.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



மதுரை சித்திரை திருவிழாவை முன்னிட்டு செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பாக தமுக்கம் மைதானத்தில் அரசு பொருட்காட்சியை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தொடங்கி வைத்து பல்வேறு அரசு துறைகள் சார்பாக அமைக்கப்பட்டுள்ள அரங்குகளை பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா, மாநகர காவல் ஆணையாளர் லோகநாதன், கூடுதல் ஆட்சியர் மோனிகா ராணா, மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி, மு.பூமிநாதன், செய்தி மக்கள் தொடர்பு துறை கூடுதல் இயக்குனர் இரா.பாஸ்கரன், இணை இயக்குநர் தமிழ் செல்வராஜன் , துணை மேயர் நாகராஜன் உட்பட பலர் உடன் இருந்தார்கள்.